*பேரா. வெங்கடேஷ் ஆத்ரேயா*

## குறைகள் நிறைந்த உணவு பாதுகாப்பு மசோதா - மாற்றம் பல தேவை

நடந்து முடிந்த பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் முடியும் தருவாயில் மத்திய அரசு உணவு பாதுகாப்பு மசோதாவை தாக்கல் செய்தது. அரசின் நோக்கம் உணவு பாதுகாப்பு அல்ல. தினம் ஒரு ஊழல் என்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விரிந்துவரும் மத்திய அரசின் ஊழல் சாதனைகளின் விளைவாக சட்ட அமைச்சர் மற்றும் ரெயில்வே அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற எதிர்கட்சிகளின் கோரிக்கையால் பாராளுமன்றம் ஸ்தம்பித்திருந்த நிலையில், பிரச்சினையைத் திசை திருப்பும் வகையில் இதை செய்தது. வரும் சில மாதங்களில் **2014** பாராளுமன்ற தேர்தலில் ஆதாயம் காண ஒருவேளை இந்த மசோதாவையே அவசர சட்டமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பிறப்பிக்கக்கூடும். எனவே அரசு தாக்கல் செய்துள்ள உணவு பாதுகாப்பு மசோதாவை பரிசீலிப்பது அவசியம்.

இந்த மசோதாவில் பல மக்கள் விரோத அம்சங்கள் உள்ளன:

- கிராமப்பகுதியில் **75** சத மக்களுக்கு மிகாமலும் நகரப்பகுதியில் **50** சதத்திற்கு மிகாமலும் பயனாளிகள் எண்ணிக்கை இருக்கும். அதாவது அனைவருக்கும் அல்ல. ஏற்கெனவே பல மாநிலங்களில் மத்திய அரசு திணித்துள்ள இலக்குசார் பொது வினியோக அமைப்பில் உள்ளதைப் போல் ஒரு பகுதி மக்கள் விலக்கிவைக்கப்படுவார்கள். அவர்கள் யார் என்பதை தீர்மானிக்கும் முறைகள் ஏகப்பட்ட மோசடிக்கு ஏற்கெனவே உள்ளானவை. தற்சமயம் உள்ள இலக்குசார் பொதுவினியோக அமைப்பு ஏராளமான ஏழைகளைப் பயனாளிகளாக அனுமதிக்கவில்லை என்பதே பெரும்பாலான மாநிலங்களில் உள்ள நிலை. பாதிக்கும் அதிகமான மக்கள் உணவு பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ள நம் நாட்டில் இலக்குசாராத, அனைவருக்குமான பொது விநியோக அமைப்பே சிறந்தது என்று பொருளாதார அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒரு புறம் செல்வந்தர்களுக்கு வரிவிலக்கு அளித்துக் கொண்டே மறுபுறம் மான்யங்களை வெட்டுவதில் குறியாக இருக்கும் மத்திய அரசு இந்த பரிந்துரையைத் தொடர்ந்து நிராகரித்து வருகிறது. மசோதாவும் அவ்வாறே செய்கிறது.
- ஏற்கெனவே பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களின் அரசாங்கங்கள் கிலோ **2** ரூபாய்க்கு அல்லது அதற்கும் குறைவாக- தமிழ்நாட்டில் விலையே இல்லாமல் - அரிசி அல்லது கோதுமையை அளித்துவரும் பொழுது, இந்த மசோதா கிலோ ஒன்றுக்கு அரிசிக்கு **3** ரூபாய், கோதுமைக்கு **2** ரூபாய் மற்றும் புன்செய் தானியங்களுக்கு **1** ரூபாய் என் விதித்துள்ளது. அது மட்டும் அல்ல. இது சட்டம் அமலுக்கு வரும் நாளில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே அமலில் இருக்கும். அதன்பின், மத்திய அரசு இந்த விலைகளை மாற்றலாம். கொள்முதல் விலை அளவு வரை உயர்த்தலாம். இது உள்ள சலுகைகளையும் ஏழை மக்களிடம் இருந்து பறிக்கும் நடவடிக்கை.
- ஏற்கெனவே நபர் ஒருவருக்கு மாதம் **7** கிலோ அரிசி/கோதுமை என்ற ஒதுக்கீடு **5** கிலோ என்று குறைக்கப்பட்டுள்ளது. ஐந்து பேர் கொண்ட குடும்பம் என்ற சராசரி அடிப்படையில் குடும்பத்திற்கு **35** கிலோ தரப்படவேண்டும். இது தான் ஏற்கெனவே இருந்த புரிதல். இது இப்பொழுது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஏழை குடும்பங்களை இது கடுமையாக பாதிக்கும்.
- ஒரு மாநிலத்தில் எவ்வளவு சதவிகிதம் பயனாளிகள் என்பதை மத்திய அரசு நிர்ணயிக்கும். இது மாநிலங்களின் உரிமையை பறிக்கும் செயல்.
- இச்சட்டத்தை அமலாக்கும் பொழுது பயனாளிகளை நிர்ணயிப்பதில் ‘ஆதார்' முறை பயன்படுத்தப்படும் என்பது ஒரு மிக மோசமான சரத்து. ஆதார் கைவிரல் ரேகை மூலம்

ஒருவரை அடையாளம் காணும் ஏற்பாடு. கரத்தால் உழைக்கும் மக்கள் விசயத்தில் இம்முறை **20%**க்கும் அதிகமாக தவறாக இருக்கும் என்பது நிபுணர்கள் கூறுவதாகும். மேலும் ஆதார் ஒரு நபர் இவர் தான் என்று சொல்ல மட்டுமே ஓரளவு பயன்படும். ஆனால் அவர் இச்சட்டத்தின் கீழ் பயன்பெற தகுதி உள்ளவரா என்பதை ஆதார் தீர்மானிக்க முடியாது.

- தேவைப்பட்டால், தானியம் கொடுப்பதற்குப் பதிலாக அரசு பயனாளிகளுக்கு ரொக்கப் பணம் அல்லது கூப்பன் சீட்டுக்கள் வழங்கலாம் என்று சட்ட நகல் கூறுகிறது. இது மிகவும் ஆபத்தானது. விலைவாசி உயர்வு ரொக்கப்பணத்தின் உண்மை மதிப்பை பெரிதும் குறைத்துவிடும். மேலும், பொது விநியோக அமைப்பின் முதுகெலும்பாக இருக்கும் தானிய பொது கொள்முதல் ஏற்பாட்டை அழித்துவிடும். இதுவே அரசின் நோக்கம் என்று கூட கருத வாய்ப்பு உள்ளது. காசை கொடுத்து சந்தையில் வாங்கிக் கொள்ளுங்கள் என்றூ அரசு மக்களை துரத்தி விடுகிறது என்றும் அப்படியே கொள்முதல் ஏற்பாட்டை நீர்த்துப் போகச் செய்து விவசாயிகளையும் பாதிப்புக்கு உள்ளாக்கும் வேலையையும் செய்கிறதோ என்றே அச்சப்பட வேண்டி உள்ளது.
- மத்திய அரசு வழங்கும் தானியங்களை வைத்து மாநில அரசு பயனாளிகளுக்கு வினியோத்தை உறுதிபடுத்த வேண்டும் என்றும் இதில் தவறினால் மாநில அரசு உணவு பாதுகாப்பு அலவன்ஸ் வழங்க வேண்டும் என்றூம் சட்ட வரைவு கூறுகிறது. ஆனால் மத்திய அரசு உரிய தானியத்தை வழங்குவதற்குப் பதிலாக மாநில அரசுகளுக்கு காசாகக் கொடுக்கலாம் என்றும் மாநில அரசுகள் இதன் அடிப்படையில் நிலமையை எதிர்கொள்ள வேண்டும் என்றும் பொருள்படும் ஷரத்துக்கள் உள்ளன.
- திட்ட செயலாக்கத்தில் தனியார்மயத்திற்கும் சட்ட முன்வரைவு இடம் அளிக்கிறது.

கருவுற்ற மற்றும் பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு உணவு உள்ளிட்ட சில வரவேற்கத்தக்க அம்சங்கள் இந்த சட்ட முன்வரைவில் இருந்த போதிலும், மொத்தத்தில் உள்ள உரிமைகளை பறிப்பதாகவும் மத்திய அரசின் கைகளில் திட்ட செயல்பாட்டு அதிகாரத்தை குவிப்பதாகவும், கணிசமான பகுதி ஏழை மக்களின் உணவு பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க மறுக்கும் வகையிலும் இம்மசோதா அமைந்துள்ளது. அரசின் நோக்கமே உணவு மானியத்தை வெட்டுவது என்பதாக உள்ளதே தவிர அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இல்லை. மாறாக, வரிச்சலுகைகள் மூலம் **2011-12** நிதி ஆண்டில் மட்டும் இந்நாட்டு, பன்னாட்டு பெரும் கம்பனிகளுக்கும் பெரும் செல்வந்தர்களுக் **5,73,000** கோடி ரூபாய் வரிவிலக்காக வாரி இறைத்துள்ள மத்திய அரசு, ஆண்டுக்கு **1,40,000** கோடி ரூபாய் மட்டுமே தேவைப்படுகின்ற, அனைத்துக் குடும்பங்களுக்கும் மாதம் ரூபாய் **2** விலையில் **35** கிலோ தானியம் என்ற இலக்கு சாராத, அனைவருக்குமான பொது விநியோக அமைப்பை செயல்படுத்த மறுக்கிறது. தானியத்திற்குப் பதிலாக நேரடி பணப்பட்டுவாடா போன்ற ஆபத்தான நடவடிக்கைகள் மூலம் பொது கொள்முதல் மற்றும் பொது வினியோக அமைப்பை சிதைக்கும் திருப்பணியை தொடரத்துடிக்கிறது.

**2014** தேர்தலுக்குமுன் ஆரவாரமாகவும் கவர்ச்சிகரமாகவும் உணவு பாதுகாப்பு என்ற பெயரில் இம்மோசடி ஏற்பாட்டை அவசர சட்டம் மூலம் அரசு அறிமுகப்படுத்தக்கூடும். மக்கள் விழிப்புணர்வுடன் இருந்து இதை முறியடிக்க வேண்டும்.